



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்






Vol: 02 | Issue: 306 | 4 Pages | 1.6.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 306 | 4 பக்கங்கள் | 1.6.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்தல் அதனான் வரும்**

**விளக்கம்:**
யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும், தீமையான விளைவுகள் அச் சினத்தாலேயே ஏற்படும்.

# மு.க.அழகிரியுடன் முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சந்திப்பு

மதுரை, ஜூன் 1

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், ஆளுங்கட்சியானதி.மு.க. மதுரையில் நாளை கட்சியின் பொதுக் குழு கூட்டத்தை நடத்த இருக்கிறது. தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில், 6 ஆயிரத்து 500 பொதுக் குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் எனசுமார் 10 ஆயிரம் பேர்பங்கேற்க இருக்கின்றனர்.

தேர்தலை முன்னிறுத்தி நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதாக தெரிகிறது. தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மதுரை சென்றார். மதுரையில் ரோடு ஷோ நடத்திய முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், அதன்பின்னர்முன்னாள் மேயர் முத்துவின் வெண்கல சிலையை திறந்து வைத்தார்.



இந்நிலையில், மதுரை பழங்காநத்தம் பகுதியில் உள்ள தனது சகோதரர் மு.க.அழகிரியை, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தற்போது சந்தித்தார். முதல்அமைச்சராக பதவியேற்ற பின், முதல்முறையாக மு.க.அழகிரி இல்லத்திற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 10ம் வகுப்பு மாணவன் துப்பாக்கியால் சுட்டுக்கொலை சக மாணவர் வெறிச்செயல்

சண்டிகர், ஜூன்1

அரியானா மாநிலம் ஹிசார் பகுதியை சேர்ந்தவன் தீக்ஷித் (வயது 15). அங்குள்ள பள்ளி ஒன்றில் 10ம் வகுப்பு படித்து வந்தான். அவனுக்கும், அவனுடன் படிக்கும் சக மாணவன் ஒருவனுக்கும் நீண்டகாலமாக தகராறு இருந்து வந்தததாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் கன்டோன்மென்ட் பகுதி ரெயில் பாதை அருகே அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. அப்போது தீக்ஷித்துடன் படித்த அந்த மாணவன், ராணுவ வீரரான தனது தாத்தாவின் துப்பாக்கியால் தீக்ஷித்தை சுட்டான். இதில் வயிற்றில் அவனுக்கு படுகாயம் ஏற்பட்டது.

சத்தம் கேட்டு ஓடிவந்த அக்கம் பக்கத்தினர், சிறுவன் தீக்ஷித்தை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியில் அவன் பரிதாபமாக இறந்தான். சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், சிறுவனை சுட்டுக்கொன்ற சகமாணவனை தேடிவருகிறார்கள்.

# பட்டப்பகலில் துப்பாக்கி முனையில் வங்கியில் ரூ. 40 லட்சம் கொள்ளை




சண்டிகர், ஜூன் 1

பஞ்சாப் மாநிலம் கபூர்தலா மாவட்டம் ரஹானா ஜட்டன் கிராமத்தில் வங்கி உள்ளது.பஹ்வாராஹொசிர்பூர்நெடுஞ்சாலையில்இந்தவங்கிஅமைந்துள்ளது.

இந்நிலையில், இந்த வங்கியில் இன்று ஊழியர்கள் வழக்கமான பணியை மேற்கொண்டிருந்தனர். வாடிக்கையாளர்களும் பணத்தை எடுப்பது, டெபாசிட் செய்வது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, காரில் வந்த 3 பேர் கும்பல் துப்பாக்கியுடன் வங்கிக்குள் நுழைந்தது. வங்கி மேலாளர், ஊழியர்கள், வாடிக்கையாளர்களை துப்பாக்கி முனையில் மிரட்டிய கும்பல் வங்கியில் இருந்து ரூ. 40 லட்சம் பணத்தை கொள்ளையடித்து சென்றது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசில் புகார் அளிக்கப்பட்டநிலையில், வழக்குப்பதிவுசெய்தபோலீசார்சிசிடிவிகாட்சிகள் அடிப்படையில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கமல்ஹாசன் புகைப்படம் எரிப்பு ஒருவர் மீது வழக்குப்பதிவு



பெங்களூரு, ஜூன் 1

நடிகர் கமல்ஹாசன், முன்னணி இயக்குனர் மணிரத்தினம் இயக்கத்தில் 'தக் லைப்' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில்சென்னையில் நடைபெற்றது. இதில் நடிகர் கமல்ஹாசன் பேசுகையில், தமிழில் இருந்து கன்னடம் பிறந்ததாக கூறினார். இந்த பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கமல்ஹாசனின்இந்த பேச்சுக்கு கர்நாடகத்தில் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

மேலும் கன்னட அமைப்பினர், எழுத்தாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தும் கமல்ஹாசனை கண்டித்தும் மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்தனது கருத்தை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் தான் கூறிய கருத்திற்காக மன்னிப்பு கேட்க முடியாது என்று கமல்ஹாசன் கூறிவிட்டார். இதனால் கன்னட அமைப்பினர், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், கன்னட மொழி குறித்து கமல்ஹாசன் பேசிய விவகாரம் தொடர்பாக கமலின் புகைப்படத்தை, ஒருவர் தீ வைத்து கொளுத்தும் வீடியோ ஒன்று சமூக வலைதளத்தில் வேகமாக பரவியது. இதையடுத்து கன்னட யுவ சேனை அமைப்பை சேர்ந்தவர் மீது பெங்களூரு போலீசார் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முதல்மந்திரியின் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சண்டிகர், ஜூன் 1

அரியானாவில் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. அம்மாநில முதல் மந்திரியாக நயாப் சிங் சைனி செயல்பட்டு வருகிறார். அம்மாநில தலைநகர் சண்டிகரில் தலைமை செயலகம், முதல்மந்திரி அலுவலகம் உள்ளது.

இந்நிலையில், சண்டிகரில் உள்ள முதல்மந்திரி அலுவலகத்திற்கு இன்று மாலை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. சண்டிகர் போலீசாருக்கு வந்த தொலைபேசி அழைப்பில் முதல்மந்திரி அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக நபர் மிரட்டல் விடுத்தார்.

இதையடுத்து, மோப்ப நாய் உதவியுடன், போலீசார், வெடிகுண்டு நிபுணர்கள் தலைமை செயலகத்திலும், முதல்மந்திரி அலுவலகத்திலும் தீவிர சோதனை நடத்தினர். சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 2026 ஜனவரிக்குள் வடசென்னை வளர்ச்சி பணிகள் 75 சதவீதம் முடிக்கப்படும் அமைச்சர் சேகர்பாபு தகவல்

சென்னை, ஜூன் 1

சென்னை, வால்டாக்ஸ் தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் ரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய குடியிருப்புகள், புதிய சமூக நலக்கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்துதல், ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்பு பணிகளை அமைச்சர் சேர்கர்பாபு ஆய்வு செய்தார். அப்போது அனைத்து பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதன் பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

"தமிழக அரசு, வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து கடந்த 2024ம் ஆண்டு ரூ.1,000 கோடி என்று சட்டசபையில் அறிவிக்கப்பட்ட இந்த திட்டம் என்று ரூ.6,000 கோடியைதாண்டிதிட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மக்கள் நலத்திட்டங்களை அறிவித்துவிட்டு, அந்ததிட்டங்களுக்கு தொடக்க விழாவை நடத்திவிட்டு அமருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இல்லாமல், தொடர்ந்து அந்த திட்டப்பணிகளை நேர்த்தியோடும் குறிப்பிட்ட கால அளவுகள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற தொலைநோக்கு பார்வையோடு திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 7075 சதவீதம் அளவிற்கு அடுத்தாண்டு (2026) ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்வதற்கான முனைப்புடன் செயல்பட்டு கொண்டு இருக்கிறோம்."

இவ்வாறு அவர் கூறினார்.

# மாணவர்களின் தனித்திறனைக் கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும் நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூன் 1

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

பள்ளிகளில் ஐந்து நாட்களுக்கு புத்தகப்பை வேண்டாம், மாணவர்களின் தனித்திறன்களை கண்டறியுங்கள்!

தமிழகத்தில் ஆண்டு விடுமுறை முடிந்து வரும் ஜூன் 2 ஆம் தேதி திட்டமிட்டபடி பள்ளிகள் திறக்கப்படுவதை மனதார வரவேற்கிறேன். அலாரம். சீருடை புத்த கப்பை. லஞ்ச் பாக்ஸ் உணவு, வீட்டுப்பாடம், டியூஷன். பி. டி வாத்தியாரின் விசில் சத்தம் போன்ற எந்த விதிமுறைகளும் இன்றி விடுமுறை நாட்களில் கட்டுப்பாடின்றி சுற்றித் திரிந்த மழலைச் செல்வங்கள் மீண்டும் பொறுப்புடன் பள்ளி செல்வதைக் காண அனைத்து பெற்றோர்களைப் போலவே நானும் மிக ஆவலாகத் தான் இருக்கிறேன்.

ஆனால் பள்ளிகள் திறந்தவுடன் வெறும் பாடப் புத்தகங்களில் மட்டுமே பிள்ளைகளை மூழ்கடிக்காமல் ஐந்து நாட்களுக்கு மாணவர்களின் புத்தகப்பைகளுக்கு ஓய்வு கொடுத்து விட்டு ஒவ்வொரு மாணவனின் தனித்திறனைக் கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும் என தமிழக முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாகதமிழகத்தில்குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வரும் வேளையில், தற்போது பள்ளிப்படிப்பை விட பிள்ளைகளுக்கு பாலியல் ரீதியான புரிதலை ஏற்படுத்துவது தான் சாலச் சிறந்தது. தகுந்த ஆசிரியர்கள் மூலம் மோசமான தொடுகை (Good touch, Bad touch) குறித்து பள்ளிகளில் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும், தவறாக தன்னை நெருங்குபவர்கள் யாராயினும் மாணவர்கள் தைரியமாகப் புகாரளிக்கத் தேவையான வழிமுறைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

மேலும் விடுமுறைக் கொண்டாட்டம் முடிந்து பள்ளி திரும்பும் பிள்ளைகளுக்கு. கடிவாளமிட்ட குதிரை போல வெறும் பாடங்களை மட்டுமே கற்பித்தால் அவர்களின் மனநிலை எப்படியிருக்கும்? பல நாட்கள் கழித்து தனது சக நண்பர்களை சந்திக்கையில் பாடச் சந்தேகங்களை மட்டுமா கேட்டுக் கொண்டிருக்க முடியும்? புதிய மாணவர்களுடன் அறிமுகம் செய்து கொள்ளவும். பழைய தோழர்களுடன் அளவளாவுவதற்கும் சிறிது கால அவகாசம் தேவையல்லவா?

எனவே விடுமுறை முடிந்து வரும் ஆசிரியர்களும் மாணவர்களும் நல்ல புரிதலுடன்தங்கள்கற்றல் பயணத்தையும் கற்பித்தல் சேவையையும் தொடரவும், மாணவர்களின் தனித்திறனைக் கண்டறிந்து ஊக்குவிக்கவும். இந்த புத்தகமில்லா ஐந்து நாட்கள் பேருதவியாக இருக்கும்.

மேலும், அரசுப் பள்ளி மாணவர்கள் ஊற்று தோண்டி நீர் பருகிய கொடுமையையும், பள்ளிகளில் போதிய கழிவறையின்றி இரு மழலை உயிர்கள் காவு வாங்கப்பட்ட கொடூரத்தையும் இந்த தமிழகம் இன்னும் மறக்கவில்லை. இனி ஒரு பிஞ்சு உயிரை இழக்க நாங்கள் தயாராக இல்லை. எனவே தமிழகத்தின் அனைத்து பள்ளிகளிலும் சுத்தமான குடிநீர், போதிய கழிவறை வசதிகள் உள்ளனவா என்பதையும் திமுக அரசு ஆய்வு மேற்கொண்டு உறுதிபடுத்த வேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகையிலை தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ள தமிழக அரசு

சென்னை, ஜூண் 1

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

மே 31, 2025 அன்று உலக புகையிலை எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு புகையிலை மற்றும் புகையிலை தொடர்பான பொருட்களின் விற்பனை மற்றும் நுகர்வை தடுப்பதற்காக குறிப்பாக கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சிறப்பு அமலாக்க நடவடிக்கைளை தீவிரப்படுத்தியுள்ளது.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் புகையிலை எதிர்ப்புச் சட்டங்களை கடுமையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக, இலக்கு வைத்து அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் துறை, காவல் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டில், புகையிலை பயன்பாட்டின் அச்சுறுத்தலைக் கையாள அரசு பன்முக அணுகுமுறையை எடுத்துள்ளது.

•மெல்லக்கூடிய புகையிலை பொருட்களுக்கு மாநிலம் தழுவிய தடை. குட்கா, பான் மசாலா, கூல் லிப் மற்றும் பிற மெல்லக்கூடிய புகையிலை வடிவங்களின் உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவை உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் சட்டம், 2006 இன் பிரிவு 30(2) (a) இன் கீழ் வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவின் கீழ் அவற்றின் கடுமையான உடல்நலக் கேடுகளைக் கருத்தில் கொண்டு கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளன.

•2003 ஆம் ஆண்டு COTPA அமலாக்கம்.

சிகரெட் மற்றும் பிற புகையிலை பொருட்களை சிறார்களுக்கும், கல்வி நிறுவனங்களின் 100 கெஜம் சுற்றளவுக்கும் விற்பனை செய்வது 2003 ஆம் ஆண்டு COTPA சட்டத்தின் பிரிவு 6 இன் கீழ் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுபவர்கள் சட்டத்தின் பிரிவு 24 (1) இன் கீழ் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.•கூட்டுஅமலாக்கக்குழுக்களை அமைத்தல்.

தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் தொடர்ந்து விற்பனை செய்யப்படுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீவிர கவலையைக் கருத்தில் கொண்டு, காவல்துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய 391 கூட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் கல்வி நிறுவனங்கள் அருகே வழக்கமான சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன.

•மாநிலம் முழுவதும் மிகப்பெரிய அமலாக்க நடவடிக்கை (19.11.2023 முதல்)

•உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் துறையால், 5,28,948 கடைகள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

•உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் துறையால், தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்த 13,642 கடைகள் மற்றும் வாகனங்கள் கண்டறியப்பட்டன. •உணவு பாதுகாப்பு மற்றும்தரநிலைகள்துறையால், 5,258கிலோ கூல் லிப் உட்பட 1,78,828 கிலோ தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

•உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் துறையால், தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்த கடைகளுக்கு 39.14 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. •உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் 18,409 கடைகள் சீல் வைக்கப்பட்டன.

•மொத்தம் 43,167 வழக்குகள் காவல்துறையால் பதிவு செய்யப்பட்டன. •4,11,227 கிலோ தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் காவல்துறையால் பறிமுதல் செய்யப்பட்டன.

•காவல்துறையினரால் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 57,661 தகவல்கள் பகிரப்பட்டன.

இந்த குழுக்களின் செயல்திறன் மற்றும் அறிக்கையிடலை மேற்பார்வையிட மாவட்ட / நகர மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அதிகாரிகள் நோடல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். வாராந்திர ஒருங்கிணைந்த நடவடிக்கை அறிக்கைகள் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன, மேலும் வழக்கமான மறுஆய்வுக் கூட்டங்கள் காவல்துறை, உணவுப் பாதுகாப்புத் துறைகள் மற்றும் உள்ளாட்சித் துறையின் மூத்த அதிகாரிகளால் தலைமை தாங்கப்படுகின்றன. பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதில், குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு அரசு தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது. இந்த உலக புகையிலை எதிர்ப்பு தினத்தில், இந்த அமலாக்க முயற்சிகளை ஆதரிக்கவும் ஒத்துழைக்கவும், கல்வி நிறுவனங்களைச் சுற்றி புகையிலை இல்லாத சூழலை நோக்கி பாடுபடவும் அனைத்து குடிமக்களையும் அரசு அழைக்கிறது."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# ஆன்மிகத்தில் இருந்து திருக்குறளை பிரிக்கப் பார்க்கிறார்கள் கவர்னர் ஆர்.என்.ரவி

திருச்சி, ஜூன் 1

திருச்சி மாவட்டம் முசிறி அருகே குணசீலத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீபிரசன்ன வெங்கடாஜலபதி பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ராஜகோபுரம், கருடமண்டபம் மற்றும் பிரகார மண்டபம் ஆகியவற்றை கருங்கல்லால் சிற்பசாஸ்திர முறைப்படி, உன்னதமாகவும், கலை அம்சத்துடனும் புனரமைக்கவும், பக்தர்கள் தங்குவதற்கான யாத்ரீகர்கள் தங்கும் விடுதி, அன்னதான கூடம், கல்யாண மண்டபம், சேவார்த்தி மண்டபம், கோசாலை விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு திருப்பணிகளை மேற்கொள்ள பரம்பரை அறங்காவலர்கள் குழு முடிவு செய்தது.

இதனை தொடர்ந்து வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிலையில் ராஜகோபுரம் மற்றும் பிரகார மண்டபத்துக்கு கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் கே.ஆர். பிச்சுமணி அய்யங்கார் எழுதிய குணசீல மஹாத்மியம், சென்னகரை சுப்பிரமணியன் எழுதிய வள்ளுவத்தில் மெய்ஞானம் ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு விழா நேற்று கோவில் வளாகத்தில் நடைபெற்றது.



நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு புதிதாக கட்டப்படவுள்ள கோவிலின் 7 பிரகாரங்களை கொண்ட மாதிரி வடிவமைப்பினை திறந்து வைத்தார். பின்னர் அவர், ராஜ கோபுரம் மற்றும் பிரகார மண்டபம் கட்டுமான பணிக்கான அடிக்கல்லை நாட்டினார்.

இதனை தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் யதுகிரி யதிராஜமடம் 41ம் பட்டம் பீடாதிபதி ஸ்ரீஸ்ரீ யதிராஜா நாராயண ராமானுஜ ஜீயர் முன்னிலையில் கவர்னர் ஆர்.என்.ரவி நூல்களை வெளியிட, அதனை தினமலர் ஆசிரியர் ஆர். ராமசுப்பு பெற்றுக் கொண்டார். பின்னர் கவர்னர் ஆர்.என்.ரவி பேசியதாவது:

"மதங்கள் வெவ்வேறாக இருந்தாலும், தர்மம் என்பது ஒன்று தான். அது சனாதன தர்மம் மட்டும் தான். பாரதம், ராஷ்ரியம், தர்மம் ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. அவை ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளன. சமூகமும், தர்மமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

திருக்குறள் ஒரு ஆன்மிக புத்தகம். முக்தி பற்றி பேசவில்லை என்று கூறி, சில அரசியல் சிந்தனையாளர்கள் ஆன்மிகத்தில் இருந்து திருக்குறளை பிரிக்கப் பார்க்கிறார்கள். நாம் யார் என்பதை இன்றைக்கு வெளியிட்ட புத்தகங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அத்தகைய சிந்தனையை நமக்கு கல்வி பாடத்திட்டங்கள் கொடுக்கவில்லை. பாரத தேசம் ஒரு ஆன்மிக தேசம். சனாதன தர்மத்தின் மிகப்பெரிய துறவி திருவள்ளுவர்."

இவ்வாறு அவர் கூறினார்.

# கடந்த ஆண்டின் பயண அட்டையை காண்பித்து அரசு பஸ்களில் மாணவர்கள் பயணிக்கலாம்: அமைச்சர் சிவசங்கர்

சென்னை, ஜூன் 1

தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"வருகிற 2ந் தேதி பள்ளிகள் திறக்கப்படுவதை முன்னிட்டும், அதன் பின்னர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி, அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவை திறக்கப்பட உள்ளதை முன்னிட்டும் 202526ம் கல்வியாண்டில் மாணவ, மாணவிகளுக்கு கட்டணமில்லா புதிய பேருந்து பயண அட்டை அவரவர் கல்வி பயிலும் பள்ளி, கல்லூரியிலேயே இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களால் 202425ம் கல்வி ஆண்டுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டணமில்லா பயண அட்டை, பள்ளி, கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரிகளால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை கண்டக்டரிடம் காண்பித்து மாணவ, மாணவிகள் கட்டணமின்றி பயணிக்கலாம்.

பள்ளி தொடங்கும், முடியும் நேரம் வரை பேருந்துகள் சரியாக இயங்குவதை கண்காணித்திட அலுவலர்கள் குழு உருவாக்கப்பட்டுள்ளது. பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக ஏற்றி, இறக்கி செல்ல டிரைவர், கண்டக்டர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கேரளா விரைந்தது தேசிய பேரிடர் மீட்புக் குழு



கேரளாவில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 4 குழுக்களாக கிளம்பியுள்ளனர். ஒரு குழுவிற்கு 30 பேர் வீதம் 4 குழுக்களை சேர்ந்த 120 வீரர்கள் சாலை மார்க்கமாக விரைந்தனர். பத்தினம் திட்டா, ஆலப்புழா, எர்ணாகுளம், கோழிக்கோடு ஆகிய பகுதிகளில் மீட்புப் பணியில் ஈடுபடுவார்கள் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உயர்ந்துள்ளது தமிழக அரசு தகவல்

சென்னை, ஜூன் 1

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"2014ம் ஆண்டு 'மேக் இன் இந்தியா' திட்டம் தொடங்கப்பட்டபோது, 2025ம் ஆண்டுக்குள் உற்பத்தி துறையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதமாக உயர்த்துவதை இலக்காக நிர்ணயம் செய்தது. தற்போது வரை 16 சதவீதம் எட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே அதிக எண்ணிக்கையில், தமிழ்நாட்டில் மொத்தம் 31 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் செயல்பாட்டில் உள்ளன.

இதன்மூலம் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு, 25 சதவீதத்தை உற்பத்தி துறையில் இருந்து பெற்று நாட்டுக்கே வழிகாட்டும் மாநிலமாக உள்ளது. ஆடைகள், வாகன உற்பத்தி, பொறியியல் பொருட்கள் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உயர்ந்துள்ளது.



இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6 சதவீதத்துக்கும் குறைவாக இருந்தாலும், எண்ணெய் அல்லாத பொருட்களில் ஏற்றுமதியில் 15 சதவீத பங்கை தமிழ்நாடு வகிக்கிறது.

இந்தியாவின் 41 சதவீத மின்னணு சாதனப் பொருட்கள், 38 சதவீத காலணிகள் மற்றும் 45 சதவீத வாகனம் மற்றும் வாகன உதிரிபாகங்கள் தமிழ்நாட்டில் இருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டின் உற்பத்தி துறையின் சிறப்பான வளர்ச்சியினால் இந்தியாவில் 9.69 சதவீதம் மாநில உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தி நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக இருக்கிறது. பல மாநிலங்களில் ஒற்றை சாளர அனுமதி, முதலீட்டாளர் மாநாடு என்பவை வெறும் பிரசாரமாக இருந்தாலும், தமிழ்நாடு நடைமுறையில் இதை செயல்படுத்துகிறது.

தொழில்நிறுவனங்களுக்கு வழிகாட்டுவதற்காக தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ள 'கைடன்ஸ் தமிழ்நாடு' நிறுவனம், தமிழகத்தில் தொழில் தொடங்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கு நிலம், அனுமதி, தொழிலாளர் பிரச்சினை மற்றும் அன்றாட செயல்பாட்டு சிக்கல்களுக்கு உதவுகிறது. இந்த விரைவான மற்றும் திறமையான அணுகுமுறை, முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை தருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசும், அரசுப் பணியாளர்களும் துணையாக இருந்து விரைவான தீர்வுகளை வழங்குகின்றனர். மத்திய அரசு மின்னணு சாதனங்களின் உதிரிபாகங்களுக்கான ஊக்கத்தொகை திட்டத்தை அறிவித்த போது, தமிழ்நாடு ஒரு வாரத்திற்குள் இதனை செயல்படுத்தி மின்னணு சாதனங்களின் ஏற்றுமதியை உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தது.

தமிழ்நாடு 2030க்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தை அடைய திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடே இந்தியாவில் உற்பத்திதுறையில் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் மாநிலமாக இருக்கிறது.

ஆந்திரா, தெலுங்கானா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மராட்டியம் போன்ற மாநிலங்கள் தங்களுக்கிடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் வெற்றிப் பாடங்களைப் பின்பற்றினால், இந்தியா விரைவில் உற்பத்தித் துறையில் உலகளாவிய சக்தியாக உருவெடுக்கும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அருமனை அருகே குளத்தில் குதித்த போது சகதியில் சிக்கி கல்லூரி மாணவன் பலி





அருமனை

அருமனை அருகே சட்டவிரோதமாக மண் எடுத்த குளத்தில் டைவ் அடித்த கல்லூரி மாணவர் சகதியில் சிக்கி உயிரிழந்தார். அவருடன் சகதியில் சிக்கிய தம்பி உள்பட 2 பேரை உறவினர் ஒருவர் தென்னை ஓலையை வீசி காப்பாற்றினார். குமரி மாவட்டம் அருமனை அருகே மாலைக்கோடு காமக்குளம் பகுதியை சேர்ந்தவர் பிரைட். இவரது மகன் பிரினித் (19). 2வது மகன் பிரதீப். பிரினித் மார்த்தாண்டத்தில் உள்ள ஒரு கல்லூரியில் 2வது ஆண்டு படித்து வந்தார். இவர்களது வீட்டின் அருகே சிறிய குளம் ஒன்று உள்ளது. குளத்தில் பிரினித், பிரதீப் ஆகியோர் அடிக்கடி குளிப்பது வழக்கம். சமீபத்தில் குளத்தை தூர்வாரும் பணி நடந்தது.

அப்போது சட்டவிரோதமாக அதிகளவில் மண் எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தற்போது கனமழை பெய்து வருவதால் குளத்தில் நீர் நிரம்பியுள்ளது. மழைநீர் பெருக்கெடுத்ததால் குளத்தின் கரையில் குவித்து வைக்கப்பட்டிருந்த மண்ணையும் அரித்துக் கொண்டு குளத்திற்குள் தள்ளியது. இதனால் குளத்தில் சகதி நிரம்பி புதைக்குழிபோல் காட்சியளிக்கிறது.

இதனை யாரும் அறியவில்லை. இந்தநிலையில் நேற்று முன்தினம் பிரினித் வழக்கம்போல தனது தம்பி பிரதீப் மற்றும் உறவினர் மகன் ரனாய் ஆகியோரை அழைத்துக் கொண்டு குளக்கரைக்கு சென்றான். பின்னர் 3 பேரும் குளத்திற்குள் இறங்கி குளித்து உள்ளனர். இந்த நேரத்தில் 3 பேரும் ஒருவர் பின் ஒருவராக குளத்தின் ஆழமான பகுதியில் டைவ் அடித்தனர்.

ஆனால் அந்த பகுதியில் சகதி அதிகளவில் இருந்ததால் பிரினித், பிரதீப், ரனாய் ஆகிய 3 பேரும் சகதியில் சிக்கி உயிருக்கு போராடினர்.

வெளியே வர முயற்சி செய்தாலும் சகதியில் சிக்கியதால் அவர்களால் வெளியே வர முடியவில்லை. 3 பேரும் உயிர் பயத்தில் காப்பாறுங்கள்.... என்று கூச்சலிட்டனர். இவர்களது அலறல் சத்தத்தை கேட்டு அருகில் வசிக்கும் உறவினர் ரத்தினதாஸ் ஓடி வந்தார். குளத்தின் உள்ளே பிரினித் உள்பட 3 பேரின் தலை மட்டுமே வெளியே தெரிந்தது.

உடனே கீழே விழுந்து கிடந்த தென்னை ஓலையை எடுத்து குளத்துக்குள் வீசினார். பிரதீப் மற்றும் ரனாய் ஆகியோர் தென்னை ஓலையை இறுக பற்றிக்கொண்டனர். அவர்கள் 2 பேரையும் ரத்தினதாஸ் இழுத்து பத்திரமாக கரைக்கு கொண்டு வந்தார். அதற்குள் பிரினித் குளத்துக்குள் மூழ்கிவிட்டார் இது பற்றி குழித்துறை தீயணைப்பு நிலையத்துக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் வருவதற்குள் குளக்கரைக்கு வந்த பொதுமக்களில் சிலர் கயிறுகட்டி குளத்துக்குள் இறங்கினர்.

குளத்திற்குள் சகதியில் சிக்கி சுயநினைவின்றி கிடந்த பிரினித்தை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர். பின்னர் சிகிச்சைக்காக காரக்கோணம் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் மேல்சிகிச்சைக்காக திருவனந்தபுரம் உள்ள மருத்துவமனைக்கு பிரினித்தை கொண்டு சென்றனர். ஆனால் அங்கு பரிசோதனை செய்த போது பிரினித் ஏற்கனவே இறந்து விட்டதாக டாக்டர்கள் கூறினர். மீட்கப்பட்ட பிரதீப், ரனாய் ஆகிய 2 பேரும் தற்போது பிளஸ் 1 முடித்துவிட்டு பிளஸ் 2 செல்ல உள்ளனர்.

இது குறித்து அருமனை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கணவர் மீது சந்தேகம்; கொதிக்கும் எண்ணெய்யை ஊற்றிய மனைவி நெல்லையில் பயங்கரம்



நெல்லை, ஜூன் 1

நெல்லை அருகே கிருஷ்ணாபுரம் நெசவாளர் காலனியை சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன் (வயது 42). ஆட்டோ டிரைவரான இவருக்கு முத்துலட்சுமி (34) என்ற மனைவியும், 3 மகள்கள், ஒரு மகனும் உள்ளனர். கணவன்மனைவி இடையே கடந்த சில நாட்களாக குடும்ப பிரச்சினை இருந்து வந்துள்ளது.

25 நாட்களுக்கு முன்பு முத்துலட்சுமி கணவரிடம் தகராறு செய்து விட்டு தனது தாய் வீட்டுக்கு சென்றுவிட்டார். இந்த விவகாரம் தொடர்பாக நெல்லை மாவட்ட அனைத்து மகளிர்போலீஸ்நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. போலீசார் 2 பேரையும் அழைத்து விசாரணை நடத்தி அனுப்பி வைத்தனர். இதனால் முத்துலட்சுமி கடந்த 4 நாட்களுக்கு முன் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

வீட்டில் பாலசுப்பிரமணியன் தூங்கிக்கொண்டு இருந்தார். அப்போது முத்துலட்சுமி தனது கணவர் மீது தண்ணீரை ஊற்றி எழுப்பினார். இதில் அவர்களுக்கு இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. அப்போது முத்துலட்சுமி, தான் ஏற்கனவே கொதிக்க வைத்து இருந்த எண்ணெய்யை பாலசுப்பிரமணியனின் வேட்டியை அவிழ்ந்து வயிற்று பகுதிக்கு கீழே ஊற்றியதாக கூறப்படுகிறது.

இதில் வயிற்று பகுதியில் இருந்து கால் வரை அவரது உடல் வெந்தது. வலி தாங்க முடியாமல் அவர் அலறி துடித்தார். படுகாயம் அடைந்த பாலசுப்பிரமணியனை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து சிவந்திபட்டி போலீசார் விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், பாலசுப்பிரமணியனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக முத்துலட்சுமி சந்தேகமடைந்தார். இது தொடர்பாகவே அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு உள்ளது. நேற்றும் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறில் முத்துலட்சுமி கொதிக்கும் எண்ணெய்யை தனது கணவர் மீது ஊற்றியது தெரியவந்தது. இன்ஸ்பெக்டர் சுதா வழக்குப்பதிந்து முத்துலட்சுமியை கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

# தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் விதிகளை மீறி செல்லும் கனரக வாகனங்களால் அடிக்கடி விபத்து

ஆறுமுகநேரி, ஜூன் 1

தூத்துக்குடியில் இருந்து திருச்செந்தூர், குலசை, மணப்பாடு, உவரி உள்ளிட்ட புண்ணிய ஸ்தலங்களுக்கும், கல்லாமொழி, குலசேகரன்பட்டினம், கூடங்குளம் உள்ளிட்ட தொழில் நகரங்களுக்கு செல்லும் முக்கிய சாலையாக தூத்துக்குடி திருச்செந்தூர் தேசிய நெடுஞ்சாலை உள்ளது.

இச்சாலையில் பழையகாயல், ஆத்தூர், ஆறுமுகநேரி உள்ளிட்ட பகுதிகளில் சாலை மிகவும் குறுகலாக உள்ளது. இதனால் இப்பகுதிகளில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இந்த சாலை வழியாகத் தான் தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து தினமும் 500க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் மற்றும் டேங்கர் லாரிகள் மூலம் பொருட்கள் கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில் கனரக வாகனங்களில் மணல் உள்ளிட்ட கட்டுமானபொருட்கள் முறையாக தார்பாய்கள் கொண்டு மூடாமல் வாகனத்தின் மேல் பகுதிக்கு மேல் வரை அதிக பாரத்துடன் கொண்டு செல்லப்படுகிறது. மின்கம்பிகளை தொட்டுக் கொண்டும், மரக்கிளைகளில் உரசியும் கனரக வாகனங்கள் செல்கின்றன.



இவ்வாறு சாலையில் வேகமாக செல்லும் போதும் முறையாக மூடப்படாத மணல் உள்ளிட்ட கட்டுமான பொருட்கள் சாலையோரம் நடந்து செல்லும் பாதயாத்திரை பக்தர்கள் மற்றும் பைக், கார் உள்ளிட்ட வாகன ஓட்டிகள் மீதும் விழுவதால் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மேலும் அடிக்கடி விபத்துகளும் அரங்கேறுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், அதிக பாரத்துடன் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் விதிகளை மீறி செல்லும் கனரக வாகனங்கள் மீது உரிய ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்கள், வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழக அரசு பணிகளில் இருந்து ஒரே நாளில் 8,144 பேர் ஓய்வு

சென்னை, ஜூன் 1

தமிழக அரசின் துறைகளில் தற்போதைய நிலையில் 9 லட்சத்து 42 ஆயிரத்து 941 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். சுமார் 7 லட்சத்து 33 ஆயிரம் ஊழியர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். தமிழகத்தில் மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதிய வயது 58ல் இருந்து 60 ஆக கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்டது.

அதன்படி தற்போது மாநில அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆகும். ஒவ்வொரு மாதமும் ஊழியர்கள் தாங்கள் பணியில் சேர்ந்த மாதத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்று வருவார்கள். குறிப்பாக மே மாதங்களில் தான் அதிகம் பேர் ஓய்வு பெறுவார்கள்.

அதற்கு முக்கிய காரணம், அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அந்த முழு ஆண்டு முடிவு பெறும் போது மே மாதங்களில் தான் ஓய்வு பெறுவார்கள். அந்த அடிப்படையில் மே மாதம் 31ந் தேதி இன்றுடன், ஒரே நாளில் சுமார் 8 ஆயிரத்து 144 பேர் ஓய்வு பெறுகின்றனர். அதாவது மாநில அரசின் குரூப் ஏ பணியிடங்களில் 424 பேரும், பி பணியிடங்களில் 4 ஆயிரத்து 399 பேரும், சி பணியிடங்களில் 2 ஆயிரத்து 185 பேரும், குரூப் டி பணியிடங்களில் 1,136 பேரும் ஓய்வு பெறுகிறார்கள். கல்லூரி பேராசிரியர்களை பொறுத்தவரை ஏ பிரிவிலும், ஆசிரியர்களை பொறுத்தவரை பி பிரிவு ஊழியர்களாக இருப்பார்கள்.

இந்தாண்டில் ஒரே மாதத்தில் இவ்வளவு பேர் ஓய்வு பெறுவது இதுவே அதிக எண்ணிக்கையாகும். இந்த எண்ணிக்கை மொத்த அரசு ஊழியர்களில் 0.86 சதவீதம் ஆகும். சென்னை தலைமை செயலகத்தில் மட்டும் 30 பேர் வரை இன்று ஓய்வு பெறுகிறார்கள். கடந்த மாதத்தில் (ஏப்ரல்) 22 பேர் ஓய்வு பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. பருவத் தேர்வு வினாத்தாள் கசிவு: 6 பிரிவுகளில் வழக்குப் பதிவு

நெல்லை, ஜூன் 1

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. பருவத் தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பதிவாளர் கொடுத்த புகாரில் 6 பிரிவுகளில் வழக்குப் பதிந்து போலீஸ் விசாரணை நடத்தி வருகின்றனர்.





இண்டஸ்ட்ரியல் லா பாடத்தேர்வின் வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரையடுத்து தேர்வு ஒத்திவைக்கப்பட்டது.

மே 27ல் ஒத்திவைக்கப்பட்ட இண்டஸ்ட்ரியல் லா தேர்வு நடைபெற்ற நிலையில் வழக்கு பதிந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# சங்கராபுரம் அருகே நிறுத்தி வைத்திருந்த திருட்டு பைக்கில் 20 நாட்டு வெடிகுண்டுகள் பறிமுதல்





சங்கராபுரம் , ஜுன் 1

சங்கராபுரம் அருகே மலைபகுதியில் நிறுத்தி வைத்திருந்த திருட்டு மோட்டார் சைக்கிளை மீட்க சென்ற போலீசார் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 20 நாட்டு வெடிகுண்டுகளை அதிரடியாக பறிமுதல் செய்தனர். அங்கு போலீசை கண்டதும் தப்பிஓடிய 3 பேரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அருகே உள்ள தென்முடியனூரில் வாலிபர் ஒருவர் தனது வீட்டின் முன்பு மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டிற்கு தூங்க சென்றார். பின்னர் விடியற்காலை அவர் எழுந்து பார்த்தபோது தனது மோட்டார் சைக்கிள் மாயமானதை கண்டு அதிர்ச்சியடைந்த அவர் இதுகுறித்து உடனே தண்டராம்பட்டு போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

மேலும் காணாமல் போன மோட்டார் சைக்கிளில் ஜிபிஆர்எஸ் கருவி பொருத்தப்பட்டுள்ள தகவலை தெரிவிக்கவே, உடனே அந்த வாலிபரின் உதவியுடன் திருட்டுபோன மோட்டார் சைக்கிள் எங்குள்ளது என்பதை கண்டறியும் பணியில் போலீசார் இறங்கினர். அப்போது காணாமல்போன மோட்டார் சைக்கிள் கள்ளக்குறிச்சி மாவட்டம் மூங்கில் துறைப்பட்டுஅருகிலுள்ள மணலூர் காப்புக்காடு மலை அடிவாரத்தில் இருப்பதாக தெரியவரவே, அங்கு சென்ற போலீசார் வனப்பகுதியில் தீவிரமாக தேடினர்.

அப்போது அங்குள்ள ஒரு பாறையின் அடிவாரப் பகுதியில் திருட்டுபோன மோட்டார் சைக்கிள் மற்றும் மேலும் 2 மோட்டார் சைக்கிள் இருந்ததை போலீசார் கண்டறிந்தனர். பின்னர் அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்ட போது மலைப்பகுதியில் ஒரு பையில் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படுத்திய நாட்டு வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்த போலீசார், மோட்டார் சைக்கிள் திருடியவர்கள் வனப்பகுதியில் பதுங்கி உள்ளார்களா? எனதீவிரதேடுதலில் ஈடுபட்டனர்.

அப்போது போலீசார் தேடுவதை அறிந்த 3 வாலிபர்களும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். இதையடுத்து அவர்கள் யார், எந்த ஊரைச் சேர்ந்தவர்கள், அவர்கள்தான் மோட்டார் சைக்கிள் திருடினார்களா அல்லது வேட்டையாட வந்தவர்களா? என்ற கோணத்தில் போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் அதிகளவில் அங்கு வனம் மலை குன்றுகள் இருப்பதால் மான், முயல், காட்டுப்பன்றி உள்ளிட்டவைகளை வேட்டையாட நாட்டு வெடிகுண்டுகளை பயன்படுத்துகிறார்களா? என்பது தொடர்பாகவும் விசாரணை நடைபெற்று வருகிறது. பின்னர் மோட்டார் சைக்கிள் மற்றும் நாட்டு வெடிகுண்டுகளை பறிமுதல் செய்த போலீசார்தொடர்ந்துவிசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நெல்லிக்குப்பம் அருகே சி.என். பாளையத்தில் அளவுக்கு அதிகமாக பள்ளம் எடுத்த செம்மண் குவாரிக்கு சீல்



நெல்லிக்குப்பம்

நெல்லிக்குப்பம்அருகே சி.என்.பாளையம் செம்மண்குவாரியில்அளவுக்கு அதிகமாக பள்ளம் எடுப்பதாக வந்த புகாரையடுத்து ஆய்வு செய்த கோட்டாட்சியர் சீல் வைக்க உத்தரவிட்டார்.

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அடுத்த சிஎன்பாளையம் பகுதியில் விளங்கல்பட்டு பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி செம்மண் குவாரி நடத்தி வருகிறார். இந்த செம்மண் குவாரி மூலம் செம்மண்ணை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் வெட்டி எடுத்து லாரிகள் மூலம் எடுத்துச் சென்று வெளியூர்களில் விற்பனை செய்து வருகின்றனர். இந்த செம்மண் குவாரி 2004ல் அரசு மூலம் அனுமதி பெறப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும்இந்தகுவாரியில் அனுமதி பெறப்பட்ட அளவைவிட அதிக அளவிலான ஆழத்துக்கு பள்ளம் எடுப்பதாகவும், பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு மறைமுக தகவல் கிடைத்தது. தகவலின்பேரில் நேற்று கோட்டாட்சியர் அபிநயா செம்மண் குவாரி நடைபெறும் இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது குவாரிக்கான அனுமதி பெறப்பட்ட எல்லையில் அளவு கல் வைக்க வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேற்பட்ட ஆழத்தில் பள்ளம் எடுக்கக் கூடாது. குவாரி நடத்த அரசு மூலம் பெறப்பட்ட உரிமைச்சான்றிதழுக்கான நகல் குவாரியில் இருக்க வேண்டும். அனுமதி பெற்ற இடம் இல்லாமல் மற்ற இடங்களில் மண் எடுக்கக்கூடாது. லாரியில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட செம்மண் ஏற்றிச் செல்லக்கூடாது. இது போன்ற எவ்வித அரசு விதிமுறைகளையும் பின்பற்றாமல் செயல்படுவதாக தெரிய வந்தது.

இதையடுத்து செம்மண் குவாரியை பூட்டி சீல் வைக்கவும், அப்போது குவாரியில் செம்மண் ஏற்றிக்கொண்டிருந்த இருந்த ஜே.சி.பி. இயந்திரம், 3 லாரிகளையும் பறிமுதல் செய்யவும் கோட்டாட்சியர் அபிநயா உத்தரவிட்டார். அப்போது நெல்லிக்குப்பம் இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன், நடுவீரப்பட்டு சப்இன்ஸ்பெக்டர்கள் முகிலரசு, முருகன், திருவந்திபுரம் வருவாய் ஆய்வாளர் வெங்கடேசன், நடுவீரப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் அன்பரசன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# வந்தவாசி நெடுஞ்சாலை துறை 4 ஆண்டுகளில் ரூ.300 கோடியில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது



வந்தவாசி, ஜூன் 1

வந்தவாசி தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி நிறைவு விழா மற்றும் விவசாயிகள் மாநாடு நேற்று முன்தினம் நடந்தது. கலால் உதவி ஆணையாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். நகராட்சி தலைவர் ஜலால், துணைத் தலைவர் சீனிவாசன், பேரூராட்சி தலைவர்கள் ராதா ஜெகவீரபாண்டியன், வேணி ஏழுமலை, நகரச் செயலாளர் தயாளன், ஒன்றிய செயலாளர்கள் பெருமாள், பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாசில்தார் பொன்னுசாமி வரவேற்றார்.

இதில் ஆரணி எம்பி எம்.எஸ். தரணிவேந்தன் கலந்து கொண்டு 177 நபர்களுக்கு இலவச வீட்டு மனைபட்டா, பட்டாமாற்றம், ரேஷன் கார்டு, மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர பைக், விவசாயிகளுக்கு உபகரண பொருட்கள் உள்ளிட்ட நல திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது: வந்தவாசி திண்டிவனம் நெடுஞ்சாலை செய்யாறு சாலை, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை ஆகிய சாலைகள் 4 வழி சாலைகளாக மாற்றும் பணி நடந்து வருகிறது.

இதேபோல் செங்கல்பட்டு மாவட்டம் செய்யூரில் இருந்து போளூர்வரை வந்தவாசி வழியாக கழிவறை, நிழல்கூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளின் கூடிய இருவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் கிராமப்புறங்களில் உள்ள சாலைகளும் தமிழக முதல்வர் சாலை மேம்பாட்டு திட்டம் மூலமாக தரமான சாலைகள் அமைக்கப்பட்டு தற்போது தங்கு தடையின்றி அனைத்து பகுதிகளுக்கும் சென்று வரும் வகையில் சாலைகள் நல்ல நிலையில் உள்ளன.

கடந்த அதிமுக ஆட்சியில் வந்தவாசி நெடுஞ்சாலை துறைக்கு ரூ.15 கோடி தான் நிதி ஒதுக்கீடு செய்தனர்.

ஆனால் கடந்த 4 வருட திராவிட மாடல் ஆட்சியில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவின் தனி கவனத்தில் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தவாசி நகரை சுற்றி அனைத்து சாலைகளும் அகலமான சாலைகளாக மாற்றப்பட்டு போக்குவரத்துக்கு சிறந்த நகரமாக வந்தவாசி உள்ளன.

விவசாயிகள் தங்களது கரும்பு ஏற்றி வரும் டிராக்டரை வந்தவாசி நகருக்குள் வந்து சென்றார். போக்குவரத்து சிக்கல் ஏற்பட்டு காவலர்களுக்கும் டிராக்டர் உரிமையாளர்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்த நிலை மாறி தற்போது அனைத்து கரும்பு வாகனங்களும் புறவழிச் சாலை வழியாக செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு சென்று வருகிறது. விவசாயிகளின் துயரத்தை போக்கும் அரசு திராவிட மாடல் அரசு என்பது அனைவருக்கும் தெரிந்தது என்றார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் குமரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ், இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் தினகரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் இளங்கோ உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

முடிவில் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் உதயகுமார் நன்றி கூறினார்.

# உயர்கல்வியின் முக்கியத்துவம் குறித்து 7.5 சதவீத இடஒதுக்கீட்டிற்கு தகுதி பெறும் மாணவர்களுடன் கலெக்டர் கலந்துரையாடல்



தூத்துக்குடி, ஜூன்1

தூத்துக்குடி மாவட்டத்தில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டிற்கு தகுதிபெறும் மாணவ மாணவியருடன் உயர்கல்வியின் முக்கியத்துவம் குறித்து கலெக்டர் இளம்பகவத், கலந்துரையாடினார்.

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் 6 முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று 2024 25ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்று 7.5 சதவீத இடஒக்கீட்டிற்கு தகுதிபெறும் மாணவ மாணவியருடன் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் கலந்துரையாடினார். தொழிற்கல்விப் படிப்புகள், கல்லூரிகள் தேர்வு, வேலைவாய்ப்புகள் உள்ளிட்டவை குறித்த உரிய வழிகாட்டுதல்களை வழங்கினார்.

கலெக்டர் இளம்பகவத் பேசுகையில், உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்க வேண்டுமென்று என்ற நோக்கில் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ‘பெரிதினும் பெரிது கேள்” என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் என மொத்தம் 206 பள்ளிகளில் இருந்து 202425ம் கல்வியாண்டில் பிளஸ்2 தேர்வு எழுதியுள்ள அனைத்து மாணவர்களும் மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு உயர்கல்வியில் சரியான பாடப்பிரிவில் சேருவதை உறுதி செய்வது,

அவர்கள் அனைவருக்கும் என்னென்ன விதமான படிப்புகள் உள்ளது, எவ்வளவு மதிப்பெண் பெற்றிருந்தால் எந்தெந்த மாதிரியான படிப்புகளில் சேர முடியும்.

அதற்கு எந்தெந்த வழிகளில் எல்லாம் விண்ணப்பிக்கலாம் போன்ற விவரங்களை பள்ளி தலைமை ஆசிரியர்கள், உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் ஆகியோருக்கு தெரிவித்து அதனை மாணவர்களுக்கு தெரியப்படுத்தி உயர் கல்வி வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள 57 அரசுப் பள்ளிகளில் 150க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர், 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்று 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் மூலம் தொழிற்கல்விப் படிப்புகள் படிப்பதற்கு தகுதியானவர்களாக உள்ளனர்.

அவர்களை எல்லாம் அழைத்து தொழிற்கல்விப் படிப்புகள், கல்லூரிகள் தேர்வு, வேலைவாய்ப்புகள் உள்ளிட்டவை குறித்த உரிய வழிகாட்டுதல்கள் இன்று வழங்கப்பட்டு உள்ளது.

அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இடஒதுக்கீடு மூலம் தொழிற்கல்லூரிகளில் சேரக்கூடிய மாணவர்களுடைய பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கு ஆகக்கூடிய செலவு, கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வு கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. எனவே மாணவர்கள் அரசு வழங்கக்கூடிய சலுகைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார்.

மேலும் பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு தொழிற்கல்விப் படிப்புகள், மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு கல்லூரிகளைத் தேர்வு செய்வது, தேர்வு செய்யக் கூடிய பாடப்பிரிவுகள், அந்தந்த துறைகளில் இருக்கக்கூடிய வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட விவரங்கள் குறித்து மாணவ, மாணவியருக்கு விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, முன்னோடி வங்கி மேலாளர் துரைராஜ் உள்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், மாணவ – மாணவியர் கலந்து கொண்டனர்.

# தவளை மலை மண் சரிவு பகுதியில் எஸ்பி ஆய்வு



கூடலூர் , ஜூன். 1

கூடலூர் – ஊட்டி தேசிய நெடுஞ்சாலையில் தவளை மலைப்பகுதியில் மண் சரிவு ஏற்பட்ட இடம் மற்றும் ஆகாச பாலம் ஆகிய இடங்களில் நேற்று மாலை மாவட்ட எஸ்பி நிஷா காவல்துறையினருடன் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, தேசிய நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் எழிலரசன், கூடலூர் டிஎஸ்பி வசந்தகுமார், நடுவட்டம் இன்ஸ்பெக்டர் துரைராஜ் மற்றும் காவல்துறையினர் உடன் இருந்தனர். தவளை மலை பகுதியில் மண்சரிவு ஏற்பட்ட இடத்தின் மேல் பகுதியில் சரிந்து விழும் நிலையில் உள்ள பாறையின் தன்மை குறித்தும் போக்குவரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார்.


எஸ்பி நிஷா செய்தியாளர்களிடம் பேசுகையில், ‘‘தற்போது அத்தியாவசிய தேவைக்கான வாகனங்கள் தவிர பிற வாகனங்களை இரவு நேரத்தில் இந்த சாலையில் இயக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. நடுவட்டம் மற்றும் சில்வர் கிளவுட் பகுதிகளில் போலீசார் இரவு நேரத்தில் வாகன போக்குவரத்தை கண்காணித்து வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாக மழை சற்று குறைந்து உள்ள நிலையில் மழையின் தன்மையை பொறுத்து போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்படும். மேலும் மாற்றுப் பாதை இல்லாததால் இந்த வழியிலேயே அனைத்து வாகனங்களும் செல்ல வேண்டி உள்ளது. பாதிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் பாதுகாப்பாக வாகனங்கள் கடந்து செல்லும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி பாதுகாப்பு கருதி தாங்களாகவே தேவையற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த சாலையில் விபத்துக்கள் ஏற்படும் ஆபத்து உள்ள பகுதிகளில் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய நெடுஞ்சாலைத்துறையுடன் இணைந்து காவல்துறையும் செயல்படும்’’ என தெரிவித்தார்.

# இரண்டாம் போக நெல் சாகுபடி அமோகம் என்ன வளம் இல்லை இந்த ராம்நாட்டில் 3வது ஆண்டாக விவசாயிகள் அசத்தல்



ராமநாதபுரம். ஜூன் 1

வறட்சி, தண்ணீர் பஞ்சம், சீமை கருவேல மரங்கள் அடர்ந்த பகுதி, தரிசு நிலங்கள் என பெயர் பெற்ற ராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக 3வது ஆண்டாக இரண்டாம் போகம் நெல் விவசாயம் செய்து விவசாயிகள் சாதித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், கடலாடி, கமுதி, திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம், ராமநாதபுரம், மண்டபம், திருப்புல்லாணி, போகலூர், நயினார்கோயில், பரமக்குடி உள்ளிட்ட 11 யூனியன்களில் நெல் பிரதான பயிராக பயிரிடப்படுகிறது.

கடந்தாண்டு மாவட்டம் முழுவதும் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் பயிரிடப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் பெய்ய வேண்டிய பிரதான பருவமழையான வடகிழக்கு பருவமழை காலம் கடந்து பெய்தது.

இதனால் முன்விதைப்பு விவசாயம் பாதிக்கப்பட்டது. இருந்த போதிலும் தொடர் மழையால் 65 சதவீத கண்மாய், குளங்கள் நிறைந்தது. மேலும் தொடர் மழையால் மாவட்டம் முழுவதும் கதிர்விடும் தருவாயில் இருந்த சுமார் 1 லட்சம் ஏக்கர் வரையிலான நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகினர்.

இந்நிலையில் ராமநாதபுரம் பாசன வசதிக்காக வைகை அணையிலிருந்து 3 கட்டமாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் பார்த்திபனூர் மதகு வழியாக பரமக்குடி, சத்திரக்குடி, களரி, ராமநாதபுரம் வழித்தடத்தில் உள்ள கண்மாய்கள் நிறைந்தது. ராமநாதபுரம் பெரிய கண்மாயும் முழு கொள்ளவை எட்டியது. கண்மாய், குளத்து தண்ணீரை பயன்படுத்தி இரண்டாம் போக விவசாயம் செய்ய விவசாயிகள் முடிவு செய்தனர்.

அதன்படி சத்திரக்குடி, போகலூர், ராமநாதபுரம் அருகே அச்சுந்தன்வயல், ஆர்.எஸ்.மடை, சக்கரக்கோட்டை கண்மாய் பகுதி, திருஉத்தரகோசமங்கை சாலையிலுள்ள களக்குடி, மேலச்சீத்தை, எக்கக்குடி உள்ளிட்ட சில கிராம பகுதிகள் மற்றும் கடலாடி அருகே உள்ள சிக்கல் பகுதி.

பரமக்குடி அருகே பார்த்திபனூர் என மாவட்டம் முழுவதும் சுமார் 5000 ஏக்கரில் விவசாயிகள் கடந்த பிப்ரவரி மாதத்தில் அறுவடைக்கு பிறகு உழவார பணிகளை மேற்கொண்டு ஆடுதுறை45, கோ1, ஜோதி மட்டை, நாட்டு மட்டை, ஆர்.என்.ஆர், என்.எல்.ஆர், குழியடிச்சான் உள்ளிட்ட நெல் ரகங்களை விதைத்தனர். அப்போது பெய்த மழைக்கு பயிர்கள் முளையிட்டு வளர தொடங்கியது.

தொடர்ந்து கண்மாய் போன்ற நீர்நிலைகளில் கிடந்த தண்ணீரை பாய்ச்சி களை எடுத்தல், உரமிடுதல் உள்ளிட்ட பராமரிப்பு பணிகளை செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக பரவலான மழை பெய்து வருகிறது. இதனால் பயிர்கள் நன்றாக வளர்ந்து கதிர்விடும் நிலையை எட்டியுள்ளது. ஓரிரு வாரங்களில் ஈரப்பதம் காய்ந்தவுடன் அறுவடை நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் 2ம் போக நெல்பயிர்கள் நன்றாக வளர்ந்து கதிர்விடும் நிலையை எட்டியுள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். வறட்சியான மாவட்டத்தில் தொடர்ந்து 3வது ஆண்டாக விவசாயிகள் 2ம் போகமாக நெல் பயிரிட்டு அசத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகள் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் செப்டம்பர் மாதம் பருவமழையை எதிர்பார்த்து நெல் விவசாயம் செய்யப்படுகிறது. இதனால் அரசுகள் பரிந்துரை செய்யும் காப்பீடு நிறுவனங்கள் நவ.15 வரை மட்டுமே காப்பீடு செய்து கொள்ள கால அவகாசம் வழங்குகிறது. ஆனால் போதிய மழையின்மை மற்றும் கனமழை என இரு காலநிலையிலும் மகசூல் பாதிக்கப்படுகிறது.

இதனால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை செலவு ஏற்படுகிறது. இத்தகைய சூழ்நிலையிலும் கண்மாய்களில் கிடக்கின்ற நீரை பயன்படுத்தி கோடை விவசாயம் செய்யப்படுகிறது. எனவே, இந்த விவசாயத்திற்கு பயிர் காப்பீடு செய்துக் கொள்வதற்கு ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், அப்படி செய்தால் கண்மாய்களில் தண்ணீர் கிடக்கின்ற பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் தயக்கமின்றி கோடை விவசாயம் செய்ய முன் வருவார்கள், என்றனர்.

# மெஷினில் நாற்று நடவு செய்தால் ரூ.4 ஆயிரம் மானியம்

அணைக்கட்டு : மெஷின் மூலம் நெல் நாற்று நடவு செய்தால் ரூ.4 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வேலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிக அளவில் நெல் பயிரிட்டு வருகின்றனர்.

அறுவடைக்கு மெஷின் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நாற்று நடுவதற்கு ஆட்கள் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, தற்போது வேளாண்மை பொறியியல் துறை மூலம் நெல் நடவு மெஷின்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும், வெளியில் மெஷின்களை வாடகைக்கு எடுத்து நெல் நாற்று நடவு செய்தால் ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், அணைக்கட்டு அடுத்த ஏரிப்புதூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி நெல் நடவு மெஷினை வெளியில் வாடகைக்கு எடுத்து வந்து நிலத்தில் மெஷின் மூலம் நடவு பணியில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு குறுவை சாகுபடி திட்டத்தில் ரூ.4 ஆயிரம் மானியம் வழங்குவதற்கு அணைக்கட்டு வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்குமார், துணை வேளாண்மை அலுவலர் புனித்ராஜ், உதவி வேளாண்மை அலுவலர் காயத்ரி மற்றும் வேளாண் துறையினர் நேற்று ஆய்வு செய்தனர். மேலும், நாற்று நடும் மெஷின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அப்போது, ஊராட்சி மன்ற தலைவர் கீதா வெங்கடேசன், ஒன்றிய திமுக செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இதுகுறித்து வட்டார வேளாண்மை அலுவலர்கள் கூறுகையில், மெஷின்கள் மூலம் குறைந்த நேரத்தில் நெல் நடவு பணியை முடித்துவிடலாம். மெஷின் மூலம் நடவு பணியை மேற்கொண்டால் நாற்றுகள் இடையே சரியான இடைவெளி இருக்கும். களை எடுக்கும்போது எந்தவித பாதிப்பும் ஏற்படாது. கூடுதலான விளைச்சல் இருக்கும். மெஷின்களை வெளியில் வாடகைக்கு எடுத்து நடவு பணியில் ஈடுபட்டால் ஒரு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும் என்றனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

1.6.2025

# நெல்லியாளம் நகர மன்ற கூட்டத்தில் 12 கவுன்சிலர்கள் 'ஆப்சென்ட்'



பந்தலூர் , ஜூன் 1

நீலகிரிமாவட்டம்,நெல்லியாளம் நகராட்சியின் மாதாந்திர கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. மூன்றில் ஒரு பகுதி கவுன்சிலர்கள் கலந்து கொள்ளாததால் கூட்டத்தை தலைவர் சிவகாமி ஒத்திவைத்தார். இந்நிலையில் நேற்று நகர மன்ற கூட்டம் தலைவர் சிவகாமி தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் சுபஸ்ரீ முன்னிலை வகித்தார்.

மொத்தம் 20 கவுன்சிலர்களில் தலைவர் சிவகாமி, துணைத்தலைவர் நாகராசு மற்றும் திமுக கவுன்சிலர்கள் சேகர், முரளிதரன், நாகராஜ், பன்னீர்செல்வம், சாந்தி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலர் ரமேஷ் உள்ளிட்ட 8 கவுன்சிலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திமுக கவுன்சிலர்கள் நான்கு பேர், அதிமுக கவுன்சிலர் இருவர் உள்ளிட்ட 12 கவுன்சிலர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் நகராட்சியில் பம்ப் ஆபரேட்டர்களாக பணி செய்பவர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாகஅந்ததொகை வழங்கவில்லை. அதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மழையால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், சாலை, நடைபாதை, தெருவிளக்குகள் பராமரிப்பு உள்ளிட்ட அடிப்படை பணிகள் குறித்து பேசப்பட்டது. தொடர்ந்து, ஆணையாளர் பேசும்போது, நகராட்சி பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய பணிகளை உடனடியாக செய்வதாக கூறினார்.

ஒரு வாரத்தில் நடைபெற்ற இரண்டு கூட்டங்களில்கவுன்சிலர்கள்கலந்து கொள்ளாதது குறித்து தலைவர் சிவகாமியிடம் கேட்டபோது, ''திமுக கவுன்சிலர்கள் கலந்து கொள்ளாதது குறித்து மாவட்ட செயலாளருக்கு தெரிவித்துள்ளோம்'' என்றார், திமுக மாவட்ட செயலாளர் கே.எம்.ராஜுவிடம்கேட்டபோது, ''திமுக கவுன்சிலர்கள் நகர்மன்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பது குறித்து தலைமைக்கு தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

நெல்லியாளம் நகர் மன்ற தலைவர் சிவகாமிக்கு எதிராக ஒப்பந்ததாரர் ஒருவர் கவுன்சிலர்களை நகர்மன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் தடுத்து வருவதாகவும் அதற்கு கூட்டத்தை புறக்கணிக்கும் கவுன்சிலர்கள் துணை போவதாகவும் பொதுமக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறது.

# குன்னூர் ரன்னிமேடு ரயில் நிலையத்தில் சாரல் மழையில் பயணிகள் 'செல்பி' எடுத்து மகிழ்ச்சி



குன்னூர் , ஜூன் 1

குன்னூர் ரன்னிமேடு ரயில் நிலையத்தில் சாரல் மழையிலும் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து சுற்றுலா பயணிகள் மகிழ்ந்தனர். குன்னூர் – ஊட்டி மற்றும் மேட்டுப்பாளையம் இடையே இயக்கப்படும் மலை ரயிலில் பயணம் செய்ய சர்வதேச சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த மலை ரயிலுக்கு, 2005 ல் 'யுனெஸ்கோ' அங்கீகாரம் வழங்கியது. இதன் பிறகு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. குன்னூரில் இருந்து 6 கி.மீ., தொலைவில் உள்ள, குன்னூர் ரன்னிமேடு ரயில்நிலையத்தை சுற்றிலும் அழகிய மலைப்பகுதிகள் காணப்படுகின்றன.

மேலும், தோட்டக்கலை துறையின் காட்டேரி பூங்காவும், இதே இடத்தில் உள்ளதால், சுற்றுலா பயணிகள் வந்துசெல்ல மிகவும் சிறந்த இடமாக உள்ளது. இந்த நிலையில் நீலகிரியில் அவ்வபோது சாரல் முதல் கன மழை பெய்து கொண்டிருக்கும் சூழலில் சுற்றுலா பயணிகளின் நலனுக்காக சில நாட்களாக நீலகிரியில் உள்ள அனைத்து பூங்காக்களும் அடைக்கப்படுவதும், திறக்கப்படுவதுமாக இருந்து வருகிறது.

இருந்த போதிலும் இது வரை மலை ரயில் பாதையில் விபத்துகள் ஏற்படாத பட்சத்தில் மலை ரயிலில் பயணம் மேற்கொள்ள சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதே போல மேட்டுப்பாளையத்தில் இருந்து மலை ரயில் மூலமாக குன்னூர் வந்த சுற்றுலா பயணிகள் ரன்னிமேடு ரயில் நிலையத்தில் இறங்கி சாரல் மழையிலும் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்ந்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (1.6.2025)

மேஷம்: மனநிலை சீராக இருக்கும். தொழிலில் முன்னேற்றம் காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

ரிஷபம்: உடல்நலத்தில் சிறிது கவனம் தேவைப்படும். நிதி நிலைமை மேம்படும். தகவல் தொடர்புகளை கவனமாகக் கையாள வேண்டும்.

மிதுனம்: பண மற்றும் குடும்ப பிரச்சனைகளை சந்திக்க நேரிடலாம். நிதானமாக செயல்பட பரிந்துரைக்கப்படுகிறது.

கடகம்: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சமூகத்தில் மரியாதை பெற வாய்ப்பு உள்ளது.

சிம்மம்: வேலை மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

கன்னி: தொழிலில் முன்னேற்றம் காணலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

துலாம்: பண மற்றும் குடும்ப பிரச்சனைகளை சந்திக்க நேரிடலாம். நிதானமாக செயல்பட பரிந்துரைக்கப்படுகிறது.

விருச்சிகம்: பணமற்றும்குடும்பபிரச்சனைகளை சந்திக்க நேரிடலாம். நிதானமாக செயல்படபரிந்துரைக்கப்படுகிறது.

தனுசு: உறவுகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சந்திராஷ்டமம் காரணமாக அதிக நிதானம் தேவை.

மகரம்: வேலை மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் காணலாம். திருமண பேச்சு வார்த்தைகள் சாதகமாக நடைபெறும்.

கும்பம்: வேலை மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் காணலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

மீனம்: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். நிதானமாக செயல்பட பரிந்துரைக்கப்படுகிறது.

# வேலூர் மாவட்டத்தில் நாளை பள்ளிகள் திறப்பால் தூய்மை பணிகள் தீவிரம்

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் ஜூன் 2 பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் தூய்மை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடித்து வரும் 2ம் தேதி பள்ளிகள் திறக்கப்படுகிறது.எனவே, பள்ளி வளாகத்தில் பழுதடைந்த கட்டிடங்கள் அல்லது உடைந்து விழும் நிலையில் சுற்றுச்சுவர் ஏதேனும் இருந்தால், அத்தகைய கட்டிடங்களை மாணவர்கள் அணுகாத வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கழிவறைகள், மின் சாதனங்கள் பராமரித்திருக்க வேண்டும். பள்ளிகளில் உள்ள அனைத்து வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் ஆய்வகம், கழிவறைகள் உள்ளிட்ட பிற அறைகள் மற்றும் வளாகம் ஆகியவற்றை நன்கு தூய்மைப்படுத்தப்பட வேண்டும். வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை மற்றும் பிற அறைகளிலுள்ள தளவாடப் பொருட்கள், கதவு மற்றும் ஜன்னல்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவை நன்கு தூய்மைப்படுத்தப்பட்டு இருப்பதை உறுதி செய்ய வேண்டும். காலாவதியான ஆய்வகப் பொருட்களை முறையாக பதிவேட்டில் பதிவு செய்து நீக்கம் செய்ய வேண்டும்.

பள்ளிக் கட்டிடத்தின் மேற்பரப்பில் சேர்ந்துள்ள குப்பைகளை அகற்றி மழைநீர் வடிந்து ஓடுவதற்கான பாதை சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மாணவர் பயன்பாட்டிற்கான குடிநீர் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அனைத்தையும் உள்ளே கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து, தூய்மையாகவும் பாதுகாப்பான குடிநீர் மாணவர்களுக்கு கிடைக்கும் வகையிலும் உள்ளதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதன்படி, வேலூர் மாவட்டத்தில் கலெக்டர் சுப்புலட்சுமி உத்தரவின் பேரில் பள்ளி கட்டிடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோல், மாநகராட்சியில் கமிஷனர் ஜானகி உத்தரவின்பேரில் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் கிருமிநாசினி கொண்டு தூய்மை செய்யப்பட்டது. இதில், 2வது மண்டல சுகாதார அலுவலர் சிவக்குமார் தலைமையில் நேற்று மண்டலத்திற்கு உட்பட்ட பள்ளிகளில் கிருமி நாசினி கொண்டு தூய்மை செய்யப்பட்டது. பள்ளிகள் திறப்பதற்கு முன்னதாக அனைத்து பள்ளிகளும் சரியான முறையில் தூய்மை செய்யப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சென்னையில் மெட்ரோ குடிநீர் லாரிகள் இன்று முதல் ஸ்டிரைக்



சென்னை, ஜூன். 1

சென்னையில் மெட்ரோ குடிநீர் லாரி உரிமையாளர்கள் நாளை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர். 2024 பிப்ரவரியுடன் ஒப்பந்தம் முடிந்த நிலையில் மீண்டும் புதிய ஒப்பந்தத்தை அறிவிக்கக் கோரி ஸ்டிரைக் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பரில் ஒப்பந்தம் குறித்து அறிவிப்பு வெளியிட்டும் இறுதி செய்யப்படவில்லை என புகார் எழுந்த நிலையில், சென்னையில் சுமார் 450 மெட்ரோ குடிநீர் ஒப்பந்த லாரிகள் இய ங்கி வரும் நிலையில் வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விருத்தாசலத்தில் அரசு பேருந்து ஓட்டுநருக்கு உடல்நலக் குறைவு: பேருந்து விபத்து

கடலூர், ஜூன் 1

விருத்தாசலத்தில் அரசு பேருந்து ஓட்டுநருக்கு திடீரென வலிப்பு வந்ததால் பேருந்து விபத்துக்குள்ளானது. ஓட்டுநருக்கு திடீரென வலிப்பு வந்ததால் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தடுப்புச்சுவரில் மோதியது. ஓட்டுநர், நடத்துநர் உள்ளிட்ட 14 பேர் படுகாயமடைந்து விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# "படையாண்ட மாவீரா" படத்தின் டிரெய்லர் வெளியீடு




கடந்த 1998ம் ஆண்டு முரளி நடிப்பில் வெளியான 'கனவே கலையாதே' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் இயக்குநராக அறிமுகமானவர் வ.கவுதமன். இரண்டாவதுபடமாக2010ம்ஆண்டுவெளியான'மகிழ்ச்சி'படத்தைஇயக்கினார். இந்நிலையில், தற்போது வி.கே. புரடக்ஷன்ஸ் தயாரிக்கும் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக கொண்ட படம் ஒன்றை இயக்கி படத்தின் நாயகனாகவும் நடிக்கிறார்.

இப்படத்தில் சமுத்திரக்கனி, ராதாரவி, மன்சூர் அலிகான், பாகுபலி பிரபாகர், கிங்ஸ்லீ, ஆடுகளம் நரேன், இளவரசு, தீனா, மொட்டை ராஜேந்திரன், சரண்யா பொன்வண்ணன் ஆகியோர் நடிக்க, கதாநாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகம் ஆகிறார். ஜி.வி பிரகாஷ் இசையமைக்க, வைரமுத்து பாடல்கள் எழுதுகிறார்.

விருத்தாச்சலம், நெய்வேலி மற்றும் பண்ருட்டி பகுதிகளில் முதல்கட்ட படபிடிப்பு நடத்திய நிலையில், 'மாவீரா' என தலைப்பிடப்பட்டிருந்த இப்படத்தின் பெயர் 'மாவீரா படையாண்டவன்' என மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படம் மண்ணையும் மானத்தையும் காக்க வீரம் ஈரம் அறத்துடன் போராடி வாழ்ந்த ஒரு மாவீரனைப் பற்றிய உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இயக்குநர் கவுதமனின் "படையாண்ட மாவீரா" படத்தின் முதல் பாடல் வெளியாகியுள்ளது. 'புலிக்கொடி' எனத்தொடங்கும் பாடல் வைரலாகி வருகிறது.

பாமக மூத்த நிர்வாகியாக இருந்த காடுவெட்டி குருவின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'படையாண்ட மாவீரா' படத்துக்கு தடை கோரி தொடரப்பட்ட வழக்கில், இயக்குனர் கவுதமன் பதிலளிக்க சென்னை உரிமையியல் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இப்படம் கடந்த 23ம் தேதி வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் படத்தின் வெளியீட்டு தேதி கோர்ட்டு நடவடிக்கையால் மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் 'படையாண்ட மாவீரா' படத்தின் டிரெய்லரை படக்குழு தற்போது வெளியிட்டுள்ளது.

# பிலிம்பேர் விருதுகளை வீட்டின் கழிவறை கைப்பிடிகளாக பயன்படுத்துகிறேன் நசீருதீன் ஷா



இந்தி சினிமாவில் பழம்பெரும் நடிகராக விளங்குபவர் நசீருதீன் ஷா தனது தத்ரூபமான நடிப்பால் உலக அளவில் அடையாளம் காணப்படும் இந்திய நடிகர்கள் முக்கியமானவராக உள்ள நசீருதீன் ஷா இந்திய அரசின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ மற்றும் பத்ம விபூஷண் உள்ளிட்ட விருதுகளையும் பெற்றவர். பாலிவுட் மூத்த நடிகர் நசீருதீன் ஷா திரைப்பட விருதுகள் குறித்த தனது பார்வையை வெளிப்படுத்தி உள்ளார்.

சமீபத்தில் விருதுகள் குறித்து பேசிய நசீருதீன் ஷா "எல்லா நடிகர்களுமே ஒரு குறிப்பிட்டகதையின்கதாப்பாத்திரமாக மாறி அந்த கதையை மக்களுக்கு உணர்த்தும் வகையில் நடிக்கிறார்கள். அவர்களை அழைத்து அவர்களில் ஒருவரை சிறந்தவர் என விருது கொடுப்பது எந்த அளவுக்கு நியாயம் ? நான் சமீபமாக வழங்கப்பட்ட பிலிம்பேர் விருதுகளுக்கு செல்லவில்லை. ஏற்கனவே வாங்கிய விருதுகளை நான் கட்டிய பண்ணை வீட்டின் கழிவறைக்கு கைப்பிடியாக அமைத்திருக்கிறேன். கழிப்பறை செல்லும் நீங்கள் எவரும் இரண்டு முறை உங்கள் கையால் விருதை பெற முடியும்" என கிண்டலாக கூறியுள்ளார்.

பிலிம் பேர் உள்ளிட்ட திரைத்துறை விருதுகளை அவர் கிண்டல் செய்திருந்தாலும், இந்திய அரசால் வழங்கப்பட்ட பத்ம விருதுகளை பெற்றதே தனது வாழ்வின் மதிப்பு வாய்ந்த தருணம் என அவர் பேசியுள்ளார். "நான் பத்மஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் விருதுகளைப் பெற்றபோது, என் தொழில் வாழ்க்கையைப் பற்றி எப்போதும் கவலைப்பட்ட என் மறைந்த தந்தையை நினைவு கூர்ந்தேன். அந்த மரியாதைகளைப் பெற நான் ராஷ்டிரபதி பவனுக்குச் சென்றபோது, நான் மேலே பார்த்து, என் தந்தையிடம் இதையெல்லாம் பார்க்கிறீர்களா என்று கேட்டேன். அந்த நேரத்தில் அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்திருப்பார் என்று நான் நம்புகிறேன்" என்று நசீருதீன் ஷா கூறியுள்ளார். தற்போது புற்றீசல் போல கிளம்பியுள்ள திரை விருது விழாக்களை குப்பை என அவர் சாடியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மெட்ராஸ் மேட்னி படத்தின் செகண்ட் சிங்கிள் வெளியீடு

அறிமுக இயக்குநரான கார்த்திகேயன் மணி இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'மெட்ராஸ் மேட்னி'. இப்படத்தில் காளி வெங்கட், சத்யராஜ், ரோஷினி ஹரிபிரியன், ஷெலி மற்றும் விஷ்வா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சமீபத்தில் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியானது.இப்படத்துக்கு கே.சி. பாலசரங்கன் இசையமைத்துள்ளார். இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் வழங்க மெட்ராஸ் மோஷன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. பர்ஸ்ட் லுக் போஸ்டரில் ஒரு இளைஞன் பணியன் அணிந்துக் கொண்டு வீட்டு வாசலில் நிற்கிறான். அவன் வீட்டின் அருகில் உள்ள ஒரு கோவிலில் நாய் சிறுநீர் கழிக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. படத்தின் ஒளிப்பதிவை ஆனந்த் ஜி கே, படத்தொகுப்பு சதீஷ் குமார், கலை வடிவத்தை ஜாக்கி மேற்கொள்கின்றனர்.

'மெட்ராஸ் மேட்னி' படத்தின் 'என்னடா பொழப்பு இது' எனத்தொடங்கும் பாடலை நடிகர் வடிவேலு பாடியுள்ளார். 'மெட்ராஸ் மேட்னி' திரைப்படம் வரும் ஜூன் மாதம் 6ம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அதிகாரபூர்வமாக அறிவித்தது. 'மெட்ராஸ் மேட்னி' திரைப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 'மெட்ராஸ் மேட்னி' படத்தின் 2வது பாடலான 'உசிரே உன்ன தானே' தற்போது வெளியாகியுள்ளது. இப்பாடலை கவிஞர் சினேகன் வரியில் விஜய் யேசுதாஸ் பாடியுள்ளார்.

# புரோ கபடி லீக் வீரர்கள் ஏலம்.... மும்பையில் தொடக்கம்



12 அணிகள் இடையிலான 12வது புரோ கபடி லீக் போட்டி அக்டோபர் மாதம் தொடங்குகிறது. இதையொட்டி ஏற்கனவே வீரர்கள் தக்கவைப்பு மற்றும் விடுவிப்பு நடந்தது. 12 அணிகளும் மொத்தம் 83 வீரர்களை தக்கவைத்து இருக்கிறது. இந்த நிலையில் வரும் சீசனுக்கான புரோ கபடி லீக் வீரர்கள் ஏலம் மும்பையில் இன்றும், நாளையும் நடக்கிறது.

ஏலப்பட்டியலில் மொத்தம் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். நட்சத்திர வீரர்களான பவன் ஷெராவத், அர்ஜூன் தேஷ்வால், அஷூ மாலிக், தேவாங் தலால், மனிந்தர் சிங், பர்தீப் நர்வால்,நவீன்குமார்,பசல்அட்ராசலிஉள்ளிட்டோரும்பட்டியலில் அங்கம் வகிக்கின்றனர். இதில் இருந்து 217 வீரர்களை அணிகள் வாங்க இருக்கின்றன.

ஒவ்வொரு அணியிலும் 18 முதல் 25 வீரர்கள் இடம் பெற முடியும். ஒவ்வொரு அணியும் ரூ.5 கோடியை செலவிட முடியும். வீரர்கள் தங்கவைத்ததிற்கு செலவிட்டது போக மீதமுள்ள தொகையை வைத்து ஏலத்தில் வீரர்களை எடுக்க முடியும். வீரர்கள் 4 வகையாக பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 'ஏ' பிரிவினருக்கு ரூ.30 லட்சமும், 'பி' பிரிவினருக்கு ரூ.20 லட்சமும், 'சி' பிரிவினருக்கு ரூ.13 லட்சமும், 'டி' பிரிவினருக்கு ரூ.9 லட்சமும் அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் நாள் ஏலத்தை சாரு ஷர்மாவும், 2வது நாள் ஏலத்தை மல்லிகா சாகரும் நடத்துகின்றனர். முதல் நாள் ஏலம் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

# ஐ.பி.எல்.: மோசமான சாதனை படைத்த ரஷித் கான்



ஐ.பி.எல். தொடரில் முல்லன்பூரில் நடைபெற்ற வெளியேற்றுதல் சுற்று ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் ஆடின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற மும்பை முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த மும்பை 20 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 228 ரன்கள் குவித்தது.

மும்பை தரப்பில் அதிகபட்சமாக ரோகித் சர்மா 81 ரன்கள் எடுத்தார். குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா, சாய் கிஷோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 229 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 208 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 20 ரன் வித்தியாசத்தில் மும்பை வெற்றி பெற்றது.

குஜராத் டைட்டன்ஸ் தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 80 ரன்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறுவதற்கான தகுதி சுற்று 2க்கு முன்னேறியது. தோல்வி கண்ட குஜராத் தொடரில் இருந்து வெளியேறியது. இந்நிலையில், இந்த ஆட்டத்தில் குஜராத் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் 4 ஓவர் பந்து வீசி 2 சிக்சருடன் 31 ரன்கள் விட்டுக்கொடுத்தார்.

நடப்பு தொடரில் அவர் இதுவரை 33 சிக்சர்களை வாரி வழங்கி இருக்கிறார். இதன் மூலம் ஐ.பி.எல். போட்டியில் ஒரு சீசனில் அதிக சிக்சர்களை விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனைக்கு ரஷித் கான் சொந்தக்காரர் ஆனார். இதற்கு முன்பு 2022ம் ஆண்டு முகமது சிராஜ் தனது பந்து வீச்சில் 31 சிக்சர் வழங்கியதே அதிகபட்சமாக இருந்தது.

# டி20 கிரிக்கெட்; வங்காளதேசத்தை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய பாகிஸ்தான்



வங்காளதேச கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் இருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 201 ரன்கள் குவித்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக பர்ஹான் 74 ரன்கள் எடுத்தார். தொடர்ந்து 202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த வங்காளதேசம் 19 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 144 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

இதன் மூலம் 57 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வங்காளதேசம் தரப்பில் அதிகபட்சமாக தன்சிம் ஹசன் சகிப் 50 ரன் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் அப்ரார் அகமது 3 விக்கெட் வீழ்த்தினார். பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட டி20தொடரை20எனகைப்பற்றிஉள்ளது.இருஅணிகளுக்கும் இடையிலான கடைசி டி20 போட்டி நாளை நடக்கிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.